10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 334 திங்கட்கிழமை 23 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18




## இலங்கைப் படையினரை விசாரிக்கும் ஐ.நா.

கொழும்பு,ஏப்.23

ஐ.நா அமைதிப்படையில் பணியாற்ற லெபனானுக்கு அனுப்பப்பட்ட 49 இலங்கைப் படையினர் தொடர்பான மனித உரிமை விசாரணையை முன்னுரிமை கொடுத்து உடனடியாக, மேற்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரியுள்ளதாகவும் இது தொடர்பில் ஐ.நா. மேலதிக விசாரணையை மேற்கொள்ளும் எனவும் ஐ.நா அமைதிகாப்பு நடவடிக்கை பணியக பேச்சாளர் தெரிவித்

06▶

## இரண்டாம் தவணை இன்று ஆரம்பம்

கொழும்பு,ஏப்.23

சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

இன்று ஆரம்பிக்கும் இரண்

06▶

## தாமரை மொட்டிலும் விழுந்தது பிளவு

கொழும்பு,ஏப்.23

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பிலான 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அடுத்த நாடாளுமன்ற அமர்வில் சமர்ப்பிக்கவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ள நிலையில் இதனை ஆதரிப்பது தொடர்பில் கூட்டு எதிரணிக்குள் பிளவுகள் தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தனிநபர் பிரேரணையாக இந்த சட்ட மூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்த பிரேரணைக்கு நாடாளுமன்றத்தில் சகல கட்சிகளினதும் ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர்

06▶



## வீரதுங்கவை விடோம் டுபாய் விடாப்பிடி

கொழும்பு,ஏப்.23

மிக் போர் விமானக் கொள்வனவு மோசடி தொடர்பாக தேடப்படும், ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவை, நாடு கடத்த ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மறுத்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

அமெரிக்காவுக்குச் செல்லும் வழியில் டுபாய் விமான நிலையத்தில் உதயங்க வீரதுங்க தடுக்கப்பட்டார். இதையடுத்து அவர் ஐக்கிய அரபு எமிரேட்சை விட்டு வெளியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும், உதயங்க வீரதுங்கவை இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு

06▶

# யாழ்.மக்களின் உடலில் ஓடுவது சிங்களக் குருதியே

## மீளவும் முருங்கை மரம் ஏறுகிறார் ஆளுநர்



யாழ்ப்பாணம்,ஏப்ரல் 23

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பும் பலரின் குருதியில் கலந்திருப்பது சிங்களக் குருதிதான். அங்கு குருதி தேவைப்படும் போது, இராணுவத்தினரே அதனை வழங்குகின்றனர்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே மீளவும் தெரிவித்தார்.

புங்குடுதீவு அம்பலவாணர் கலை அரங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வு நேற்று நடைபெற்றது.

06▶

## பௌத்தத்துக்கு ஆபத்து; அலறுகிறார் மகிந்த



கொழும்பு,ஏப்.23

இந்த நாட்டை ஆட்சி செய்த வெள்ளையர்களும் செய்யாத நடவடிக்கைகளை பௌத்த மதத்துக்கு எதிராக உள்நாட்டு கறுப்பு வெள்ளைக்காரர்கள் செய்வது கவலைக்குரியது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ராமஞ்ஞா பிரிவின் மகாநாயகர் நாபானே பேமசிரி தேரரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

06▶

## புதிய அமைச்சரவை அடுத்தவாரம் பதவியேற்பு

கொழும்பு,ஏப்.23

புதிய அமைச்சரவை அடுத்தவாரம் பதவியேற்கவுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

பாணந்துறை பிரதேச சபையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி நாடு திரும்பியதும் ஜனாதிபதி-பிரதமர் இடையேயான சந்திப்பை அடுத்து புதிய அமைச்சரவை பதவியேற்பு இடம்பெறும்.

06▶


கோப்புப்படம்

## இரணைதீவை விடுவிக்க இன்று ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி,ஏப்.23

கடற்படையினர் வசமுள்ள கிளிநொச்சி -இரணைதீவை விடுவிக்கக் கோரி 359 நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள், இரணைமாதா நகரில், இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

இரணைமாதா நகரில் உள்ள தேவாலயத்தில், காலை 7.30 மணிக்கு ஒன்றுகூடவுள்ள இரணைதீவு மக்கள், அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர். பின்னர், தற்போது போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்

06▶

## யாழ்.பல்கலையில் முள்ளிவாய்க்கால் நினைவாலயம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைப்பதற்கு ஏற்பட்ட தடங்கல் மாணவர்கள் மற்றும் நிர்வாகத்துக்கு இடையே ஏற்பட்ட இணக்கப்பாட்டுடன் நீங்கியது.

வன்னி இறுதிப் போரின் போது உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உறவுகள் உட்பட

06▶

## பால்மா, எரிவாயு விலைகள் அதிகரிக்கும்?



கொழும்பு,ஏப்.23

பால்மா ஒரு கிலோவின் விலை 75 ரூபாவாலும் சமையல் வாயு சிலிண்டரொன்றின் விலை 245 ரூபாவாலும் இன்னும் சில தினங்களில் அதிகரிக்கப்படவுள்ளதாக அரச வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

தற்போது லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியதும் பால்மா விலை மற்றும் சமையல்

06▶

# சோழர் காலக் கோயிலை பாதுகாத்துப் பேணுக

## பொதுமக்கள் கோரிக்கை





கொழும்பு, ஏப்.23

அழிவடைந்துசெல்லும் நிலையில் காணப்படும் சோழர் காலத்து சிவன் கோயிலான பூநகரி மண்ணித்தலை சிவன் கோயிலைப் பாதுகாத்துப் பேணுமாறு பிரதேச பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மண்ணித்தலை சிவன் கோவில் மிகவும் தொன்மையாக வரலாற்றுச் எச்சமாகக் காணப்படுகிறது. ஆனால் இது தற்போது அழிவடைந்து செல்லும் நிலையில் உள்ளது. பிரதேச பொது மக்களாகிய நாம் இதனை பாதுகாக்கும் முயற்சிகளில் ஈடுபட முடியாது.

அவ்வாறான ஒரு முயற்சியில் ஈடுபட்ட போதும் தொல்லியல் திணைக்களத்தினால் தடுத்து நிறுத்தப்பட்டோம். கோயில் இருக்கும் பகுதியில் ஏதேனும் பணிகளில் ஈடுபடுவது சட்டவிரோதம் எனத் தெரிவிக்கப்பட்டதோடு அவ்வாறு ஈடுபட்டால் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவீர்கள் என்றும் எச்சரிக்கப்பட்டோம். இதனால் பொது மக்களால் எவ்வித பணிகளையும் மேற்கொள்ள முடியாதுள்ளது. அதேவேளை தொல்லியல் திணைக்களம் உள்ளிட்ட சம்பந்தப்பட்டவர்களும் அதனை பாதுகாக்கும் முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளவில்லை" எனவும் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களின் வரலாறு தொடர்பில் அதிகம் பேசுகின்ற அரசியல் தரப்பினர்கள் கூட தமிழர்களின் வரலாற்று தொன்மை ஒன்று அழிவடைந்து செல்வதனை கண்டு கொள்ளாமையும் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே இந்த வரலாற்று தொன்மையான மண்ணித்தலை சிவன் கோவிலை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (அ)

## காஷ்மீர் பெண்களுக்கு நாமல் ரக்பி பயிற்சி



கொழும்பு, ஏப்.23

இந்திய பெண்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ரக்பி பயிற்சி அளிக்கும் காணொளி ஒன்று வெளியாகி பரவலாகி வருகின்றது.

காஷ்மீர் பெண்களிடம் ரக்பி விளையாட்டினை வளர்ச்சியடைய செய்வதற்காக நாமல் ராஜபக்ச முன்வந்துள்ளதாக அண்மையில் செய்தி வெளியாகியிருந்தது. காஷ்மீர் பெண்கள் ரக்பி அணியின் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக நாமலிடம் உதவி கோரிய நிலையில் நாமல் அதற்கான உதவிகளை வழங்கியிருந்தார். அவர்களுக்காக முதற்கட்டப் பயிற்சியை வழங்கும் நோக்கில் நாமல் ராஜபக்சவின் ஏற்பாட்டில், பயிற்சிக் குழுவொன்று காஷ்மீர் நோக்கி சென்றது.

அந்தக் குழுவுடன் நாமலும் சென்றுள்ள நிலையில் முதல் நாள் பயிற்சியை நாமல் ஆரம்பித்து வைத்துள்ளார். நாமலின் இந்த உதவிக்கு அந்த நாட்டு சமூக வலைத்தளச் செயற்பாட்டாளர்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்துள்ளனர். இதே வேளை பயிற்சியின் போது காஷ்மீர் விளையாட்டு வீராங்கனைகள் நாமலுக்கு மொழி கற்பிக்க முயற்சிக்கும் காணொளி ஒன்று ஊடகங்களில் வெளியாகியுள்ளது.(அ)

## லசந்த கொலை வழக்கு: இன்னுமொருவர் சிக்குவார்?

கொழும்பு, ஏப்.23

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைத் தொடர்பில், பயங்கரவாத விசாரணைப் பிரிவின் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் சந்திர வகிஸ்டாவிடம், விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லசந்த படுகொலைத் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள, ஓய்வுபெற்ற முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர், பிரசன்ன நாணயக்காரவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வெளியான தகவல்களுக்கு அமைய, சந்திர வகிஸ்டாவிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லசந்த விக்கிரதுங்கவின் குறிப்புப் புத்தகம் ஒன்றை, சந்திர வகிஸ்டாவுக்கு தாம் வழங்கியதாக பிரசன்ன நாணயக்கார விசாரணைகளின்போது தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## அமைச்சு ஒதுக்கீடு பணிகள் நிறைவு

கொழும்பு, ஏப்.23

அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சர்களுக்காக ஒதுக்கப்படும் அமைச்சுக்களை ஒழுங்குபடுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக ஜனாதிபதியின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

"புதிதாக நியமிக்கப்படும் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்படும் துறைகள் தொடர்பாக, ஒழுங்குகள் கடந்த புதன் கிழமை நிறைவடைந்தன.

இதையடுத்து பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க பிரிட்டனுக்குச் சென்றிருந்த ஜனாதிபதிக்கு அந்த அறிக்கை, உடனடியாகவே தொலைநகல் மூலம் அனுப்பப்பட்டது.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலர் சமன் எக்கநாயக்கவிடமும் அந்த அறிக்கையின் பிரதி கையளிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் படி தேசிய அரசாங்கத்தில் 48 அமைச்சர்களை நியமிக்க முடியும்.

ஜனாதிபதி கேட்டுக் கொண்டதற்கிணங்க, பிரதமரின் செயலருடன் இணைந்து, புதிய அமைச்சர்களுக்கான துறைகளை ஒதுக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், இந்த அறிக்கையின் விபரங்களை வெளியிட அவர் மறுத்துள்ளார். (அ)

## 2 கிலோ தங்கம் கடத்திய 2 பேர் நேற்றுக் கைது

கொழும்பு, ஏப்.23

இந்தியாவுக்கு சுமார் 2.35 கிலோகிராம் தங்கத்தை கடத்த முயன்ற இலங்கையர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுங்க அதிகாரிகளால் குறித்த இருவரும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 9.1 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கத்தை மீட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் மும்பை நோக்கி பயணிப்பதற்காக நேற்றுக் காலை விமானநிலையத்துக்கு வந்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டதாக, சுங்கத் திணைக்களத்தின் உதவி ஊடகப் பேச்சாளர் விபுல மினுவன்பிட்டிய தெரிவித்துள்ளார். (அ)

## பதவி நீக்கம் அவசியமில்லை

### சந்திரிகா கருத்து



கொழும்பு, ஏப்.23

சுதந்திரக் கட்சியில் இருந்து மஹிந்த அமரவீர மற்றும் துமிந்த திஸாநாக்கவை பதவி நீக்கம் செய்ய எந்தத் தேவையும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்தனகலையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீரவை பணி நீக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இவர்களைப் பதவி நீக்கம் செய்வதற்கு எந்தவித தேவையும் இல்லை. சிலர் தமது அரசியல் ஆதாயத்துக்காக இவர்களைப் பதவி நீக்குமாறு கோருகின்றனர்" என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குறிப்பிட்டார்.

'குரூப் 16' அணியைச் சேர்ந்தவர்களே துமிந்தவையும், மகிந்த அமரவீரவையும் பதவி விலக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். கூட்டாக இணைந்து எடுக்கப்பட்ட தீர்மானத்துக்குப் புறம்பாக துமிந்த மற்றும் மஹிந்த அமரவீர செயற்பட்டதாகக் குற்றம் சுமத்தியே இவர்களைப் பதவி நீக்குமாறு கூறி கடந்த 5ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மத்தளவுக்கு வந்த விமானத்தில் மர்மம்

கொழும்பு, ஏப்.23

மத்தள விமான நிலையத்தில் மூன்று நாட்கள் தரித்து நின்று விட்டு, நேற்று முன்தினம் மாலை புறப்பட்டுச் சென்ற ரஷ்யாவின் இராட்சத சரக்கு விமானமான அன்ரனோவ்-225, மீண்டும் எரிபொருள் நிரப்புவதற்காக பாகிஸ்தானின் கராச்சியில் தரையிறக்கப்பட்டமை தொடர்பாக பாகிஸ்தான் ஊடகம்ஒன்று சந்தேகம் வெளியிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இந்த விமானம் கராச்சி ஜின்னா அனைத்துலக விமான நிலையத்தில் இரகசியமாகத் தரையிறக்கப்பட்டதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

முன்கூட்டியே திட்டமிடப்படாமல், இந்த விமானம் எரிபொருள் நிரப்புவதற்காக தரையிறக்கப்பட்டதாகவும், பணியாளர்கள் ஓய்வெடுத்த பின்னர் நேற்றுக் காலை இது, சவூதி அரேபியாவின் டமாம் நகருக்குப் புறப்பட்டுச் சென்றது என்றும் பாகிஸ்தான் சஹீன் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

'அவசரமாக எரிபொருள் நிரப்புவதற்காகவே மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்ட அந்த விமானம் 3 நாள்களின் பின்னரே எரிபொருள் நிரப்பிய நிலையில் புறப்பட்டிருந்தது. ஆனால் சிலமணிநேரப் பயணத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் நிரப்ப வேண்டுமெனக் கூறி, கராச்சியிலும் அந்த விமான அவசரமாகத் தரையிறக்கப்பட்டமை ஏன்?' என்று பாகிஸ்தான் ஊடகம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

640 தொன் எடையுள்ள பொருட்களைச் சுமந்து செல்லக் கூடிய இந்த விமானத்தில் கொண்டு செல்லப்படும் பொருட்கள் பற்றிய எந்த விபரங்களும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

எதிரொலி
Ethiroli
திங்கள், 23 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

# இது இன்னொரு பிரச்சினை

'இல்லாதவனுக்கு இல்லை என்ற ஒரு பிரச்சினை மட்டும் தான். இருப்பவனுக்கோ அதனால் ஆயிரம் பிரச்சினைகள்' என்று பணம் படைத்தவர்கள் தங்களுக்குள் சொல்லிக் கொள்வார்கள். இந்த வார்த்தைகள் தனியே பணத்துக்கு மாத்திரம் பொருத்தமானதல்ல. உலகியல் வாழ்வின் அத்தனை விடயங்களுக்கும் அச்சொட்டாகப் பொருந்தவே செய்கின்றது.


மகிந்தவின் காலத்தில் கண்ணீருக்கும் கட்டுப்பாடிருந்தது. இறந்து போனவர்களுக்கு அஞ்சலிக்கக் கூட அனுமதியிருக்கவில்லை. அப்படி யாரும் அஞ்சலித்தால், புலிகளை நினைவு கூர்கிறார்கள் என்று பிடித்துச் செல்லப்பட்டார்கள். குறிப்பாக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவு கூரவோ, அந்தப் பேரழிவில் மாண்டு போனவர்களுக்கான ஒரு சொட்டுக் கண்ணீர் விடவோ முடியாத சூழல் இருந்தது.

ஆனால் கண்முன்னே நிகழ்ந்த ஒரு கூட்டுவலியை எத்தனை நாள் தான் வெளியே கொட்டாமல், உள்ளுக்குளேயே அடைத்து வைத்துப் புழுங்கிக் கொண்டிருக்க முடியும்? எப்போது தங்கள் மன அவசங்களை வெளியில் கொட்டித் தீர்க்கலாம் என்ற நாளுக்காக மக்கள், காத்திருந்தார்கள். மைத்திரி ஆட்சிக்கு வந்த பின்னர் ஏற்பட்ட சாதகமான விடயங்களில் , முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு இருந்த மறைமுகத் தடையை நீக்கியமை முக்கியமானது. அதுவரையும் எமக்கிருந்த பிரச்சினை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிக்க முடியாதிருக்கிறதே என்ற ஒற்றைப் பிரச்சினை மாத்திரம் தான்.

ஆனால், “இறந்தோரை நினைவு கூரவோ, அஞ்சலி செலுத்தவோ எவ்வித தடையும் இல்லை” என்று அரசு அறிவித்த பின்னர் ஒவ்வொரு திசையில் இருந்தும் ஒவ்வொரு பிரச்சினைகள் முளைத்தன. இந்தப் பிரச்சினைகள் எவையும் தென்னிலங்கையில் இருந்து வந்தவை அல்ல. எல்லாமே நாமே உருவாக்கிக் கொண்டவை தான். ஒரு நினைவேந்தலை இரு கூறாக்கி, இரு இடங்களில் இருவேறு நேரங்களில் அனுஷ்டித்தார்கள். காரணம், அரசியல் மட்டுமே. இரண்டு அரசியல் தரப்புக்கள் அந்த நிகழ்வை தங்கள் கையில் எடுத்துக் கொண்டு, ஒரு தரப்பின் நிகழ்வை அடுத்த தரப்பு புறக்கணித்தன. ஏனெனில் திருமணம் என்றால் தாமே மாப்பிள்ளையாகவும், செத்த வீடு என்றால் தாமே பிணமாகவும் இருக்கவேண்டுமென்ற சின்னத்தனமான சிந்தனையே இப்படி ஒரு கூட்டுப் படுகொலையின் நினைவுகளைக் குழிதோண்டிப் புதைக் , குமளவுக்கு நடக்கச் செய்திருந்தன.

கடந்தமுறை வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நடைபெற்றபோது, அங்கு அஞ்சலி செலுத்த வந்த கூட்டமைப்பின் தலைவரை நோக்கி, பொதுமக்கள் தரப்பில் கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அது இன்னொரு தரப்பின் திட்டமிட்ட செயலாகவும் கூறப்பட்டது. ஆனால் இறுதிபோரில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆக்கபூர்வமாக எதையும் பிடுங்கியிருக்கவில்லைத்தான். அதற்காக தனியே சம்பந்தர் மீது மட்டும் வசை மாரி பொழிவது சரியல்ல. பிட்டுக்கு மண் சுமக்க வந்த சிவபெருமானுக்கு , பாண்டிய மன்னன் அடித்த போது அந்த அடி எல்லோர் முதுகிலும் விழுந்ததைப் போல, அந்தக் காலத்தில் கூட்டமைப்பில் இருந்த சகலரும் ஏதோ ஒரு வகையில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த முடியாத கையாலாகாதவர்களே. எனவே இம்முறையாவது கேடுகேட்ட அரசியல் ஆதாயங்களையும் பேதங்களையும் தூக்கி எறிந்துவிட்டு, ஒன்றாக அஞ்சலிக்க வாருங்கள்.

“உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்”



## மன்னிப்பு கோரிய பி.பி.சி.

லண்டன்,ஏப்.23

இலங்கை ஜனாதிபதி மற்றும் இந்திய பிரதமர் தொடர்பாக, தவறான தகவலை வெளியிட்டதற்காக பி.பி.சி. மன்னிப்புக் கோரியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு லண்டனில் நடைபெற்றது. இதன்போது மாநாடு தொடர்பில் இடம்பெற்ற நேரடி ஒளிபரப்பின் போது பி.பி.சி. செய்தியாளர்கள் தவறான அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி பக்கிங்ஹாம் மாளிகைக்கு வந்திறங்கியுள்ளார் என ஒளிபரப்பாளர் கூறிய போது, இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே மாளிகைக்கு வந்திறங்கியுள்ளார். தங்களது தவறுக்காக வருந்துவதாகவும், அன்று பணியில் இருந்தவரினால் தவறான தகவல் வழங்கப்பட்டு விட்டதாகவும், பிபிசி செய்தி சேவை மன்னிப்பு கோரியுள்ளது.

## முல்லை கடற்கரையில் விசித்திர சங்கு



முல்லைத்தீவு,ஏப்.23

முல்லைத்தீவு கடற்கரையில் விசித்திரமான சங்கு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முற்பகல் கடற்கரையோரப் பிரதேசத்தை சுத்தப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட போதே இந்த சங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும். இந்த சங்கின் வெளிப்பகுதி தோற்றம் ஒரு பூசணிக்காய் போன்று காணப்படுவதாகவும், உள்பகுதி ஒரு பறவை போன்று விசித்திரமாக காணப்படுவதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த சங்கு விலைமதிக்க முடியாத பொருளாக காணப்படுவதாகவும் அந்தப் பகுதி மீனவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## அரசிலிருந்து விலகும் பொன்சேகா



கொழும்பு,ஏப்.23

அரசாங்கத்திலிருந்து வெளியேறிச் சென்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 16 பேருக்கும் மீண்டும் அமைச்சுப் பதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்தால், தான் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அமைச்சர் பதவிகளை இராஜினாமா செய்துள்ள 16 பேருக்கும் மீண்டும் புதிய அமைச்சுப் பதவிகள் வழங்கப்படுமா ? என ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் வினவிய போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இந்த 16 பேரும் அமைச்சரவையிலிருந்து சென்றதன் பின்னர் அமைச்சரவையில் இருந்த தரித்திரம் நீங்கியுள்ளது. இது சிறந்த ஒரு நிலைமையாகும். இதன்பிறகு செல்வதற்கு யாரும் இருக்க மாட்டார்கள் என்றே கருதுகிறேன் எனவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேலும் குறிப்பிட்டார்.

## வடக்கில் ஒரு வருடத்தில் 18 காட்டு யானைகள் பலி




வவுனியா,ஏப்.23

வடமாகாணத்தில் கடந்த ஒரு வருடத்தில் 18 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக மாகாணத்துக்கு பொறுப்பான கால்நடை மருத்துவர் பீ.கிரிதரன் தெரிவித்தார்.

சட்டவிரோத மின்சார வேலிகள் மற்றும் ஹக்க படஸ் பாவித்து யானைகளை வேட்டையாடுவதால் இவ்வாறு யானைகள் அதிகளவில் கொல்லப்படுகின்றன.

அதேபோல், வட மாகாணத்தில் காட்டு யானைகள் மட்டுமன்றி இந்த சட்ட விரோத செயற்பாடுகள் காரணமாக பல்வேறு வன விலங்குகள் கொல்லப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதாக அவர்

## அரசியலமைப்பு பேரவைக்கு பாதிப்பில்லை



கொழும்பு,ஏப்.23

நாடாளுமன்றம் முடக்கப்பட்ட போதிலும், அரசியலமைப்பு பேரவை தொடர்ந்து செயற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஏப்ரல் 12ஆம் நாள் நள்ளிரவு தொடக்கம், மே 8ஆம் நாள் வரை நாடாளுமன்றத்தை முடக்கி வைக்கும் உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

இதன் மூலம், நாடாளுமன்றத்தின் ஒழுங்குப் புத்தகத்தில் இடம் பெற்றிருந்த அனைத்து சட்ட மூலங்கள் மற்றும் பிரேரணைகளும் செல்லுபடியற்றதாகி விட்டன.

இந்த நிலையில், இவற்றை மீண்டும் நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமாயின், அவை மீண்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

எனினும், அரசியலமைப்பு பேரவைக்கு அந்த நிலை ஏற்படாது என்றும் அது தொடர்ந்து செயற்படும் என்றும் கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## மேர்வினை வளைக்கிறது ஐ.தே.க.

கொழும்பு,ஏப்.23

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைத்துக் கொள்வதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீள இணைத்துக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கட்சியின் மறுசீரமைப்புக்குழு, உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கிய நிலையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஐ.தே.கவின் முக்கிய அமைச்சர் ஒருவர் இது தொடர்பில் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே இன்று நாட்டில் இருக்கும் சிறப்பான செயல் வீரர் எனவும் அவரது தலைமையின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி புதிய பாதையில் பயணிக்க வேண்டும் எனவும் மேர்வின் சில்வா கருத்து வெளியிட்டிருந்த நிலையில், இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தற்போதிருக்கும் தடைகளைத் தாண்டி, கட்சியைப் புனரமைப்பதோடு எதிர்காலத்தை வடிவமைக்க வேண்டும் எனவும், ரணிலைத் தவிர நாட்டை முன்னேற்ற ஆளில்லை எனவும் மேர்வின் சில்வா கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த)

## இன்று நாளும் கோளும்

23.04.2018 திங்கட்கிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 10 ஆம் நாள்
அட்டமி பி.ப. 04.06 வரை
இராகுகாலம் 07.30- 09.00
பூசம் பி.ப. 06.38 வரை
சுபநேரம் காலை 06.30 - 07.30
குளிகை மு.ப. 01.30-03.00
எமகண்டம் பி.ப. 10.30 - 12.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வரவு | பக்தி | சுகம் | இலாபம் | நலம் | நேசம் | தாமதம் | ஆதாயம் | வீம்பு | ஜெயம் | மேன்மை | பாராட்டு |

### சிறுவர்களின் புனைவாற்றலை மெருகேற்றும் இயல்வாணனின் நூல்கள்

# சிறுவர்களின் உலகில் அவர்களைப் பயணிக்க வைக்கின்றன

இலக்கியம் செய்தியினை எளிமையான வகையில் மக்களிடையே கொண்டுசெல்வதற்கும் அச்செய்தியினூடாக வாசகர்களிடையே மனரீதியாகவும், செயற்பாட்டு ரீதியாகவும் மாற்றங்களை கொண்டுவந்து அவர்களை சிந்தனைபூர்வமானவர்களாகுவதில் காத்திரமான வகிபங்கு வகிக்கின்றது.

இலக்கியங்களில் சிறுவர் இலக்கியங்கள் முக்கியமான பங்கை வகிக்கின்றன. இலக்கியப் புலத்தில் இவற்றின்




வருகை அவசியமானதாகும். சிறுவர்களை நல்வழிப்படுத்துவதற்கும், அவர்களது சிந்திக்கும் ஆற்றலினை வளர்த்துக் கொள்வதற்கும், அறிவுபூர்வமான விடயங்களைக் கற்றுக் கொடுப்பதற்கும் எழுத்தாளர்கள் சிறுவர் இலக்கியத்தை நன்கு பயன்படுத்தி கொள்ள முடியும்.

சிறுவர் இலக்கியம் என்ற வகைமைக்குள் சிறுவர் கதைகள், சிறுவர் பாடல்கள், சிறுவர் நாடகங்கள், சிறுவர் நாவல்கள், சிறுவர்களுக்கான பத்தி எழுத்துக்கள் எனப் பல வகை உண்டு. இவை சிறுவர்களது வாசிப்புத் தளத்திற்குத் தீனி போடுவதற்காவும், அவர்களது உலகில் அவர்கள் பயணிப்பதற்கு ஏதுவாகவும் அமையவேண்டும்.

இப்பகைப் புலத்தில் சிறுவர் இலக்கியப் படைப்பாளிகள் தமது அனுபவ தளத்திற்கு ஏற்ப படைப்பாக்கச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஈழத்து இலக்கிய உலகில் இயல்வாணன் எனும் புனைபெயரில் அறியப்பட்ட சு.ஸ்ரீகுமரன் அவர்கள் பல்துறை ஆற்றல் கொண்டவராக விளங்குகின்றார்.

கல்வியல்துறையில் காத்திரமான செயற்பாட்டாளராக விளங்கும் இவர் 14 ஆண்டுகள் ஆசிரியராகவும், 3 ஆண்டுகள் அதிபராகவும் கடமையாற்றி அக்காலத்தில் கல்விப் புலத்தில் மாணவர்கள் சார்ந்து செயற்பட்டவர்.

கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலத்தில் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் வித்தியாலத்தை சொந்த இடத்தில் இயங்க வைத்ததுடன், பாடசாலையை பௌதீக ரீதியாகவும், மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுடன் இணைப் பாடவிதான செயற்பாட்டிலும் சாதனை படைக்க வழிகாட்டியவர்.

ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் சஞ்சிகையாக்க முயற்சிகளில் ஈடுபட்டு மாணவர்கள் எழுத்து துறையில் செயற்படுவதற்கு வழிகாட்டியாக செயற்பட்டவர். இவரது முயற்சியில் வெளிவந்த பண்மகள் சஞ்சிகையும், நகுலன் சஞ்சிகையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் சிறுவர் இலக்கிய எழுத்தாளர், சிறுகதையாசிரியர், நாவலாசியர், பத்தி எழுத்தாளர், ஊடகவியலாளர், புகைப்படவியலாலாளர் என பல தளங்களில் இயங்கி வருகின்ற இவர் சமூகம் சார்ந்த பிரக்ஞையினைத் தனது எழுத்துக்களில் வெளிப்படுத்தி வருவதுடன் சிறுவர் இலக்கியங்களில் தனது கவனத்தினைப் பதித்து வருகின்றார்.

இப்பின்னணியில் வெளிவந்த பாக்கியம் பாட்டியின் விண்வெளிப்பயணம், செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும் எனும் இரு சிறுவர் இலக்கிய நூல்கள் வெளிவந்துள்ளன.

இன்றைய யுகம் கணினி யுகம். எல்லாவற்றினையும் கணினியினூடாகவே சாதித்துவிடமுடியும் என்கின்ற நிலையில் வாசிப்பின் மகத்துவம் புரிந்துகொள்ளப்பட்டு இளையதலைமுறையினரை வாசிப்பிற்குள் உட்படுத்தப்படவேண்டிய தேவையும், அவசியமும் உணரப்படுகின்றது.

இளையவர்கள்-சிறுவர்கள்-வாசிப்பில் நாட்டமற்றுப் போகின்றார்கள் என்கின்ற கருத்துநிலையின் மத்தியில் அவர்கள் வாசிப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்காது, அவர்களுக்குப் பொருத்தமான இலக்கியங்களைப் பிரசவிக்காது அவர்களை மட்டும் குற்றம் சொல்வதில் அர்த்தமிருக்காது.

இவ்வகையில் சிறுவர்களது தளவெளியினைக் கருத்தில் கொண்டும் அவர்களது வாசிப்புத்தளத்திற்கு ஏற்றவகையிலும், எளிமையான மொழி நடையுடன் இவ்விரு நூல்களும் வெளிவந்துள்ளமை சிறப்பிற்குரியதாகும்.

பாக்கியம் பாட்டியின் விண்வெளிப்பயணம் எனும் நூலானது பாக்கியம் பாட்டி தனது மகன், மருமகள், பேரப்பிள்ளையினை பார்ப்பதற்காக விண்வெளிக்குச் செல்வதும், அங்கு பயணப்பட்டு விட்டு மீண்டும் பூமிக்கு வருவதும், அங்கு செல்வதற்கு இடைப்பட்ட பணயத்தில் நடைபெறுகின்ற சம்பவங்களும் விபரிக்கப்படுகின்ற சிறுவர் நவீனமாகும். சம்பிரதாயமானவரும், அதேவேளை உறுதி மிக்கவருமான பாட்டியும் அவரது உலகமும் ஒன்றாக இருக்கிறது. அவரது மகன் ஒரு விஞ்ஞானி. அவர்களது குடும்பம் சிறு கிரகம் போல விண்வெளியில் வலம் வரும் விண்ணாய்வு மையத்தில் வசிக்கிறது. அவர்களைப் பார்க்கச் செல்லும் பாட்டி சந்திக்கின்ற அனுபவங்கள், விண்வெளித் தகவல்கள், விண்வெளித் தொழிநுட்பம் சார்ந்த விடயங்கள் என்பன எளிமையாகவும் நகைச் சுவைக்கூடாகவும் இந்நூலில் சொல்லப்படுகின்றது.

இன்றைய சூழ்நிலையில் வெளிநாடுகளில் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் வசிக்க அவர்களது ஏக்கத்துடன் வாழும் முதியவர்கள், அவ்வேக்கத்தினைப் போக்குவதற்காக பணயப்படுவது நடைபெறுகிறது. அது போல் விண்வெளிக்குப் பயணமாதல் எதிர்கால நகர்வுகளை அடிப்படையாக கொண்ட வகையில் மனித வாழ்வின் எதிர்கால நகர்வினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

பூமியில் வாழ்கின்ற வாழ்க்கை முறைக்கும், விண்வெளியில் உள்ள வாழ்க்கை முறைக்குமிடையிலான வேறுபாடுகள், பூமியில் இருந்தபோது உள்ள சுதந்திரம் மகிழ்ச்சி, விண்வெளியில் இல்லை எனும் போது ஏங்குகின்ற மனநிலை என்பன சம்பவங்களின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றன.

பாத்திரங்கள் எதார்த்தமானதாகவும், அவற்றிக்குரிய பண்பாட்டுச் சூழ்நிலையுடனும் படைக்கப்பட்டுள்ளமை சிறப்பானதாகும். பயணத்தின் போது மொழி புரிதலினை ஏற்படுத்த சூப்பர் கணணியின் மொழிபெயர்பினையும் இங்கு குறிப்பிடலாம்.

உடலிற்கு பயிற்சி எவ்வளவு முக்கியமோ அதே போன்று வாசிப்பு மனத்திற்குப் பயிற்சியாகும்.

சிறுவயதில் இருந்தே மாணவர்கள் வாசிப்பின் பால் தம்மை ஈடுபடுத்தி வருகின்றபோது புதிது புனைகின்ற ஆற்றல், படைப்பாக்க ஆற்றல் போன்றன வளர்ச்சியடைகின்றன.

இவற்றிலும் அறிவியல்பூர்வமான புனைகதைகளின் பால் வாசிப்பனுபவத்தினை ஏற்படுத்துகின்ற போது சிறுவர்களது உலகம் விசாலமடைவதற்கான ஆற்றல் ஏற்படுவதுடன் பல்வேறு ஆய்வு ரீதியான வியடங்களில் தம்மைத் தயார்ப்படுத்திகொள்வதற்கும் தமது புறச்சூழலினை நல்லமுறையில் உருவாக்கி கொள்வதற்கும் ஏதுவாக அமையும். இந்தவகையில் இக்குறுநாவல் வாசிப்பாளராகிய சிறுவர்களுக்கு நல்விருந்தாக அமையும் என நம்புகிறேன்.

செல்லையா தாத்தாவும் செல்லக்குழந்தைகளும் சிறுவர் நூலானது சிறுவர்களது மனநிலையில் நின்றும் அவர்களிடத்தே இயல்பாக உள்ள கேள்வி கேட்கின்ற ஆற்றலினை வளர்த்துக்கொள்ளும் வகையிலும் அதற்கு ஏற்ற களமாக இந்நூலில் இடம்பெறுகின்ற சம்பாசனைகள் அல்லது உரையாடல்கள், கேள்விகள் என்பன அமைகின்றது.

தாத்தாவுக்கும் பேரனுக்கும் இடையிலான உறவு புனிதமானதாகும். கேள்விகள் கேட்கின்ற உரிமை பேரனுக்கும், கேட்கப்படுகின்ற கேள்விகளுக்குச் சலிப்பின்றியும், வெறுப்பின்றியும், சிந்தனை விரிவுடனும், பொறுமையுடனும் பதிலளிக்கின்ற மனோபக்குவம் தாத்தாவுக்கும் இயல்பானதாகும்.

தாத்தாவுக்கும் பேரப் பிள்ளைகளுக்குமான உறவின் ஊடாக பல நல்ல விடயங்களைக் கட்டமைத்துக் கொள்ள முடியும்.


இக்கால இயந்திரமான சூழலில் உறவுகள் சிதைக்கப்பட்ட நிலையில் தலைமுறை இடைவெளியின் அடிப்படையில் கூடிக் கதைப்பதற்கும், கதைகள் அளாவுவதற்கும் களங்கள் சுருக்கப்பட்டுள்ள நிலையில் கடந்தகால அநுபவங்களின் திரட்சிகளினை மீட்டுப் பார்ப்பதற்கும், சிறுவர்களை வாசிப்புத் தளத்திற்கு கொண்டு வருவதற்கும், வாசிப்பின் ஊடாக எளிமையான வகையில் அறிவுபூர்வமான விடயங்தளை அறிந்து கொள்வதற்கும் இந்நூல் உதவும் என்பது கண்கூடு.

கதைக்கு ஊடாக சிறிய சிறிய செய்திகள் சொல்லப்படுகின்றன. இது நல்ல உத்தியாகும். சிறுவர்களுக்கு கதைசொல்லல் ஊடாக செய்திகள் கொண்டு செல்லப்படும் போது அவர்களிடையே கற்பனைத் திறனை வளர்த்துச் செல்வதற்கும், சிந்தனையாற்றலினை வளர்த்து கொள்வதற்கும் களங்கள் ஏற்படும்.

பெரும்பாலும் கதைக்களம் புளியமரத்தை சூழ்ந்த வகையிலும், அங்கே கூடுகின்ற சிறுவர்களுக்கும், முதியவரான செல்லையா தாத்தாவிற்கும் இடையிலான கதையாடல்கள் மூலமும் நகர்த்தப்படுகின்றன.

இக்கதையாடல்கள் பல சிந்தனைகளினைத் திறந்து விடுவதற்கும், சிறுவர்களது ஐயத்தை போக்குவதற்குமான களமாகவும் அமைகின்றன.

இக்கதைகளினை வாசிக்கின்ற சிறுவர்களும் இத்தகைய கேள்விகளைக் கேட்டுப்பார்ப்பதற்கும், இக்கதைகளின் ஊடாக வருகின்ற அறிவியல் பூர்வமான தகவல்களை




அறிந்து கொள்வதற்கும் வாய்ப்புக்கள் ஏற்படும்.

இச்சந்திப்புக்களில் களைப்பு ஏற்படுவதற்கான காரணம், நிற வேறுபாட்டிற்கான காரணம், மழை பெய்தல் பற்றிய விடயங்கள், பிறந்தநாள் கொண்டாட்டத்தில் பயனுள்ள வகையில் மரம் நாட்டல் அல்லது புத்தகங்களை பரிசளித்தலின் முக்கியத்துவம், நிலத்தடி நீர் பற்றிய விடயங்கள், வருடக்கணிப்பு, சில்லின் தோற்றமும் அதன் வளச்சியும், வாசிப்பின் முக்கியத்துவம், நுண்கிருமிகளின் செயற்பாடுகள், இன்றைய சுழலில் மனித சமூகம் முகம் கொள்கின்ற பொலித்தீன் பாவனையில் உள்ள தீமைகள், அவற்றிற்கு மாற்றீடாக எத்தகைய செயற்பாட்டினை மேற்கொள்ள முடியும் என்பன போன்ற பல விடயங்கள் சிறுவர்களது அறிவு மேம்பாட்டிற்கு ஏற்ற வகையில் இங்கு வெளிப்படுத்தப்படுகின்றன.

இத்தகைய நுண்அறிவு சார்ந்த விடயங்களைக் கதைக்களங்களாக்கி படைப்புக்களைக் கொண்டுவருதல் வரவேற்கத்தக்கதாகும். மேலும் இத்தகைய சிறுவர் இலக்கியங்கள் ஈழத்து புலத்தில் எழுவது நலம் சேர்க்கும், காலப் பொருத்தமான செயற்பாடாக இருக்கும்.

■ எஸ்.ரி.அருள்குமரன்

# எங்களை விமர்சிக்கையில் உங்களை நினைக்கட்டுமே!





கிளிநொச்சி, ஏப்.23

"காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்தை தற்போது எல்லோரும் மறந்துவிட்டனர். எனவேதான் நாம் அவர்களின் போராட்டத்துக்கு எமது ஆதரவை வழங்கி 428 ஆவது நாளில் அவர்களுடன் இணைந்தோம். எங்களை விமர்சிக்கின்ற இந்த நேரத்திலாவது இவர்களின் போராட்டம் மக்களின் ஞாபகத்துக்கு வரட்டும்" என கிளிநொச்சி விஜய் இரசிகர் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்தில் கலந்துகொண்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கிளிநொச்சி விஜய் இரசிகர் மன்றத்தினர் இவ்வாறு கூறினர்.

428 ஆவது நாளில் உங்களுடன் கைகோர்க்கின்றோம்,காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளே .உங்களை அனைவரும் மறந்து விட்டனர். ஆனால் சமூக வலைத்தளங்களில் எங்களை விமர்சிக்கப் பலர் உள்ளனர். எங்களை அவர்கள் விமர்சிக்கின்ற நேரத்திலாவது மறந்து போன உங்களை ஒரு கணம் அவர்கள் நினைத்துப் பார்க்கட்டும்" என எழுதப்பட்ட பதாகை ஒன்றையும் அவர்கள் ஏந்தியிருந்தனர். (அ)

## மீண்டும் கூடுகிறது ஐ.தே.க உயர்பீடம்

கொழும்பு, ஏப்.23

ஐக்கிய தேசியக் கட்சியின் 10 பேர் அடங்கிய அரசியல் உயர் பீடம் மீண்டும் கூடவுள்ளது. கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பில் எதிர்வரும் 26 ஆம் திகதி இடம் பெறவுள்ள செயற்குழுக் கூட்டத்துக்கு முன்னதாக இந்த உயர்பீட கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானத்தை செயற்குழுக் கூட்டத்தில் முன்வைக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கட்சியின் தலைவர் மற்றும் பிரதித் தலைவர் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பதவிகள் குறித்தும் இதன்போது தீர்மானம் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் உயர்பீடத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## மட்டு.சிறையில் புத்தாண்டு விழா



மட்டக்களப்பு , ஏப்.23

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தமிழ் - சிங்கள புத்தாண்டு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம அத்தியட்சகர் கே.எம். எச்.யு.அக்பர் தலைமையில் நடைபெற்ற இந்தப் புத்தாண்டு விழாவில், சிறைக் கைதிகள் பலரும் பங்குபற்றி, பல்வேறு பாரம்பரிய கலை கலாசார விளையாட்டுக்களில் ஈடுபட்டனர்.

இந்தப்புத்தாண்டு விழாவில், மட்டக்களப்பு சிறைச்சாலையின் பதில் சிறைச்சாலை ஆணையாளர் ஆர்.மோகனராஜ், மட்டக்களப்பு லயன்ஸ் கழகத் தலைவர் எல்.ஆர். டேவிட், கலாநிதி ஏ.செல்வேந்திரன், மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் கே.கருணாகரன் உட்பட அதிகாரிகள், முக்கியஸ்தர்கள் மற்றும் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள் நலன்புரி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன் போது பலூன் ஊதி உடைத்தல், போத்தலில் நீர் நிரப்புதல், ஊசியில் நூல் கோர்த்தல், வினோத உடைப் போட்டி உட்பட பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.(அ)

## மேதினப் பேரணி மூன்று நாள்கள்

கொழும்பு, ஏப்.23

இலங்கையில் மூன்று வெவ்வேறு தினங்களில் மே தினப் பேரணிகள் மற்றும் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. மே 1, 6 மற்றும் 7ஆம் திகதிகள் மேதினத்தை நடத்துவதற்கு தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியற் கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

எதிர்வரும் மே 6ஆம் திகதி சுகததாச அரங்கில் மேதின நிகழ்வுகளை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே தீர்மானித்துள்ளது. இந்நிலையில் ஒன்றிணைந்த எதிரணி மே 7ஆம் திகதி காலியிலும், சில தொழிற்சங்கங்கள் மே முதலாம் திகதியும் மேதினக் கூட்டங்களை நடத்தவுள்ளன. (அ)

### பட்டதாரிகள் நியமனத்துக்காக

## வவுனியாவில் மட்டும் 653 பேருக்கு நேர்முகம்

வவுனியா,ஏப்.23

வவுனியா மாவட்ட செயலகத்திலுள்ள மனிதவள வேலைவாய்ப்பு திணைக்களத்தில் கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை 653 பட்டதாரிகளுக்கு நேர்முகத் தேர்வு இடம்பெற்றுள்ளதாக மனிதவள வேலைவாய்ப்புத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

"வவுனியா மாவட்ட செயலகத்தினூடாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளும் பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு கடந்த திங்கட்கிழமை 16ஆம் திகதியிலிருந்து இடம்பெற்று வருகின்றது. வெள்ளிக்கிழமை மாலை வரையான காலப்பகுதி வரை 653 பட்டதாரிகளுக்கு நேர்முகத் தேர்வுக்கு சமூகமளித்துள்ளனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிவரையும் பட்டதாரிகளுக்கு மனிதவள வேலைவாய்ப்பு திணைக்களத்தில் நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது. இதுவரை நேர்முகத் தேர்வுக்கு சமூகளிக்கத்த வறிய பட்டதாரிகள் உடனடியாக நேர்முகத்தேர்வுக்கு சமூகமளிக்கலாம்" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## கிழக்கு ஆளுநர் குழு சிங்கப்பூர் பயணம்

கொழும்பு, ஏப்.23

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம தலைமையில் உயர் மட்டக்குழுவொன்று சிங்கப்பூர் பயணிக்கவுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் எதிர்கால அபிவிருத்தி குறித்தும் திருகோணமலை நகர அபிவிருத்தி தொடர்பான எதிர்கால திட்டமிடல் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்காகவே இந்தக் குழு செல்லவுள்ளது.

இந்தக் குழுவில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் சரத் அபேகுணவர்தன, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் அசங்க அபேவர்தன, இணைப்புச் செயலாளர் நிமால் சோமரத்ன மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ் ஆகியோர் பயணிக்கவுள்ளனர். (அ)

## விடுமுறை ரத்துக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஏப்.23

மே முதலாம் திகதி பொது விடுமுறைத் தினத்தை இரத்து செய்து உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு தொழிற்சங்கங்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

அமைச்சர், வஜிர அபேவர்தன அரசியல் யாப்பை மீறி மே முதலாம் திகதி விடுமுறையை இரத்து செய்துள்ளதாகத் தெரிவிக்கும் இலங்கை வர்த்தக தொழிலாளர் ஒன்றியத்தின் பிரதி பொதுச் செயலாளர், எஸ்.நடேசன், இந்த தீர்மானத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## எல்லாம் சைனா மயம். அதாலை எல்லாம் இன்ப மயம்?

மஹிந்தா இப்ப புலி பதுங்கியிருக்கிற மாதிரி பதுங்கியிருக்கிறாராம். சமயம் வரேக்கை பாய்வராம். அவருக்கு ரணிலின்ரை குரல்வளையைப் பிடிச்சு இறுக்க வேணும் எண்ட எண்ணத்திலைதான் பதுங்கிறார் எண்டு தான் கேள்வி. இப்ப அவரிட்டைப் போய் ஆர் கேட்டாலும் சொல்லுறாராம் நான் ஒரு சாதாரண ஆள். என்னட்டை என்ன கிடக்கு? இந்த வெள்ளை வேட்டியும், சட்டையும் அதோடை கோவண சேப்பிலை கொஞ்சச் சிவத்தத் துணியளும்தான். சத்தியமா செலவுக்குத்தான் கொஞ்சம் வைச்சிருக்கிறன். அதையும் ஆரேன் இல்லாதது பொல்லாதது எண்டு கேட்டால் குடுத்திடுவன். எனக்குத் தேவை என்ரை மக்களின்ரை விடுதலையே ஒழிய வேறை ஒண்டும் இல்லை. அவைக்கு ரணிலிட்டை இருந்து விடுதலையை வேண்டிக் குடுத்திட்டன் எண்டால் போதும். தம்பிமாரிட்டையும், பிள்ளையளிட்டையும் அரசியலைக் கைமாத்திப் போட்டுச் சிவனே எண்டு புத்தகாயாவுக்கப் போவிடுவன். எண்ட மாதிரிச் சொல்லுறாராம்.

அவருக்கு குளுக்கோஸ் ஏத்தினமாதிரிப் போச்சுது உந்த உள்ளூராட்சி எலக்சன்– எண்டு முதலி சொல்லுறான். அதிலை காய்க்கு ஒரு நம்பிக்கை வந்திட்டுது. அடுத்த எலச்சனைக் குறி வைச்சு மெல்ல மெல்லச் சிங்கம் பதுங்கி வேட்டைக்கு நிக்கிறமாதிரி இருக்கிறார் எண்டும் சனம் கதைக்கிது. இப்ப அவருக்கு ரணில், மைத்திரியின்ரை வீக்னஸ் எல்லாம் விளங்கீட்டிது எல்லே? அப்ப இனித் தனக்குப் பதவிக்கு வர சான்ஸ் கனக்க இருக்கெண்டு காய் நம்பிது. ஆனால் ஜனதிபதி எலக்சனிலை தான் சிக்கல் வரும். ஏனெண்டால் உவை சிறுபான்மை ஆக்களோடை கனக்கச் சேட்டை விட்டிட்டினம். அதை மஹிந்த குறூப்தான் செய்ததெண்டும் அம்பிட்டுப் போச்சினம். அதாலை இனி சிறுபான்மை மஹிந்தாவை நம்பத் தயாரில்லை. பெரும்பான்மை முழுக்க தங்கடை வோட்டைப் போடவேணும். அதுக்கு யூஎன்பியின்ரை வோட்டுப் பிரியுமெல்லே?

ஜனாதிபதியாத் தம்பியாரைக் கொண்டர வேணுமெண்டால், அவர் இனிமேல் கனக்க வேலை செய்ய வேணும். அப்பிடி இறங்கி வந்து சிறுபான்மைக்கு ஆதரவா ஏதேன் கதைச்சால் இருக்கிற துவேஷ வோட்டும் இல்லாமல் போகும் எல்லே? அப்ப மஹிந்தாவும் சில வேளையளிலை இரு தலைக் கொள்ளி எறும்பாத்தான் இருக்கிறார்.. இனிவருங்காலத்திலை சிங்கள வோட்டை வேண்ட வேணும் எண்டால் சிறுபான்மையைப் பற்றிக் குறைச்சுக் கதைச்சு அவையளை அடிமையளா வைச்சிருக்க வேணும் எண்ட மாதிரிக் காட்டிக் கொண்டால் தான் பிரதமராகவோ இல்லாட்டி ஜனாதிபதியாகவோ வரலாம். அற்லீஸ்ட் எதிர்க்கட்சியாவாவது வரலாம். இனத் துவேஷத்தை விஷம் விஷமா முட்டியிலை கக்க வேணும். இல்லாட்டி பெரல் பெரலாக் கக்க வேணும்.

மஹிந்தா ஒரு தொலை நோக்குள்ள அரசியல் வியாபாரி எண்டு முதலி சொல்லுறான். எப்ப முதலைப் போட்டால் எப்ப லாபத்தை எடுக்கலாம் எண்டு உவருக்குத்தான் தெரியுமாம். அதாலைதான் புலியள் கேட்ட உடனை அவையிட்டைக் கொஞ்சமும் குறைக்க மாட்டியளோ எண்டு கூடக் கேக்காமல் ஒற்றைக் கட்டா அடிச்சவராம். அதாலை எங்களுக்கு போக்குவரத்துக்கு நல்ல றோட்டுகளும் வந்திது. சைனாக்காரன் சட்டி முட்டியளோடை குடும்பமா உள்ளுக்கை வந்திட்டான். அதாலை கனக்க மசாஜ் கிளப்புகளும் வந்து எங்கடை ஆக்களைச் சந்தோஷப்படுத்திது. மஹிந்தாவும் முதலாவது அரசியல் பணக்காரனா வந்திட்டார். கருணா அம்மானும் முதல் ஐஞ்சுக்கை வந்திட்டார். அதோடை கண்டவன், நிண்டவன், பாத்துக் கொண்டு நிண்டவன் எண்டு கனபேர் புதுப் பணக்காரரா வந்திட்டினம். கொழும்புக்கை எங்கை பாத்தாலும் சைனாக் கடையள். தடக்கி விழுந்தால் சைனாக்காரனிலைதான் தடக்கி விழவேண்டிக் கிடக்கு. எல்லாம் சைனா மயம். எல்லாம் சைனா மையம்.

நீயும் அடி. நானும் அடிக்கிறன். எனக்கு எந்த வழியிலையும் தொந்தரவு தராதையுங்கோ. எண்ட பொலிஸி தான் அவற்றை. நல்ல தரமான மஹிந்த சிந்தனை எல்லே?

**- வில்லங்கம் விநாசி**

எதிரொலி
Ethiroli
திங்கள், 23 ஏப்ரல் 2018

# மும்பைக்கு மீண்டும் அடி!



ஜெய்ப்பூர், ஏப்.23

கடைசிவரை பரபரப்பான போட்டியில் மும்பை அணியை, ராஜஸ்தான் அணி 3 வீக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதல் ஓவரிலேயே குல்கர்னியின் பந்தில் லெவிஸ் விக்கெட்டைப் பறிகொடுத்தார். ஆனால் அதற்குப் பின்னர் இணைந்த சூர்யகுமார் யாதவும், இஷான் கிஷானும் இணைந்து ராஜஸ்தான் பந்து வீச்சைச் சிதறடித்தனர். இருவரும் இணைப்பாட்டமாக 129 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். ஆனால் பின்னால் வந்தவர்கள் பொறுப்புணர்ந்து விளையாடாமல் விக்கெட்டுகளை விரைவாக இழந்தனர். அதிலும் ராஜஸ்தானின் அறிமுக வீரரான ஜோப்ரா ஆர்ச்சேரின் அபார பந்தில் ஒரு ஓவரிலேயே 3 விக்கெட்டுகளைப் பறிகொடுத்தனர். இதனால் 200 க்கும் அதிகமான ஓட்டங்களைக் குவிக்க வேண்டிய மும்பை அணி, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. மும்பை அணி சார்பில் சூர்யகுமார் யாதவ் 72, லெவிஸ் 0, இஷான் கிஷான் 58, ரோஹித் சர்மா 0, குருணல் பாண்டியா 7, ஹர்திக் பாண்டியா 4, மக்லீனன் 0 , பொலார்ட் (ஆட்டமிழக்காமல் )21 ஓட்டங்களை எடுத்தனர். பந்து வீச்சில் ஜோப்ரா ஆர்ச்சே 22 ஓட்டங்களை 4 ஓவரில் விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

சுமாரான இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி, ஆரம்பத்தில் திரிபாதி, ரஹானே ஆகியோரை இழந்து தடுமாறினாலும் பின்னர் பென் ஸ்டோக்ஸ்- சஞ்சு சாம்சன் இணைப்பாட்டத்தில் கொஞ்சம் நிமிரத் தொடங்கியது. ஆனால் இந்த ஜோடி வீழ்த்தப்பட்டதும் ராஜஸ்தான் அணியின் விக்கெட்டுகள் மளமளவெனச் சரியத் தொடங்கியது. இதனால் மும்பை அணி வெல்லும் நிலை ஏற்பட்டது. எனினும் எவரும் எதிர்பாராத விதமாக கிருஷ்ணப்பா கௌதம் இறுதிக் கட்டத்தில் அதிரடி காட்டி 11 பந்துகளில் 33 ஓட்டங்களை எடுக்க, 19.4 ஆவது ஓவரில் வெற்றி இலக்கை தொட்டது ராஜஸ்தான் அணி. அந்த அணி சார்பில் திரிபாதி 9, ரஹானே 14, ஸ்டோக்ஸ் 40, சஞ்சு சாம்சன் 52, பட்லர் 6, கிளாசன் 0, ஆர்ச்சர் 8, கௌதம் 33 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் மும்பை அணியின் பும்ராவும், பாண்டியாவும் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக ஜோப்ரா ஆர்ச்சே தெரிவானார். (அ)

## தொடர்ச்சிகள்

### யாழ்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுநரின் செயலாளர் சட்டத்தரணி எல். இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கலந்துகொண்டார்.

அதில், உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் தலைவர்கள் சம்பந்தன், மாவை சேனாதிராசா விக்னேஸ்வரன், சுமந்திரன் மற்றும் நீதிபதி இளஞ்செழியன் ஆகியோரின் பாதுகாப்புக்கு சிங்களப் பொலிஸாரே அமர்த்தப்பட்டுள்ளார்கள். அவர்களால் ஏன் தமிழ் பொலிஸாரை பாதுகாப்புக்கு அமர்த்த முடியாது? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்றே விரும்புகின்றனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் மகன் யாரைத் திருமணம் முடித்தார். சிங்களத் தலைவர் வாசுதேவ நாணயக்காரவின் மகளையே அவர் திருமணம் முடித்தார். நாட்டின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் மனைவி தமிழ்ப் பெண்.

மகிந்த ராஜபக்சவின் தங்கையை முடித்தவர் தமிழர் நடேசன். அதனால்தான் சொன்னேன், மகிந்த ராஜபக்ச உங்களுடைய மச்சான் என்று.

வெள்ளவத்தையில் சென்று பாருங்கள், அங்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. கோயில்களைக் கட்ட முடியும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் வேல் எடுத்து வரும் போது இராணுவத்தினரே அங்கு உள்ளனர்.

தென்னிலங்கையில் பௌத்த விகாரைகளுக்குள் இந்து தெய்வ விக்கிரகங்களே உள்ளன. புத்தரும் இந்துக் கடவுளும் அமைதியாக ஒற்றுமையாக உள்ள போது, அவற்றை வழிபடும் மக்களே சண்டை பிடிக்கின்றனர் என்றார்.

### யாழ். பல்கலையில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவு கூருவதற்கு நினைவாலயம் அமைக்க பல்கலைக்கழக மாணவர்கள் திட்டமிட்டனர்.

பல்கலைக்கழக வளாக முன்றலில் அதனை அமைக்கும் பணிகளை அவர்கள் கடந்த புதன்கிழமை ஆரம்பித்திருந்தனர். எனினும் அந்த இடத்தில் அமைப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தின் பணிப்பால் தடங்கல் ஏற்பட்டது.

இந்த நிலையில் பல்கலைக்கழக நிர்வாக உயர்மட்டத்துக்கும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையே கடந்த வியாழக்கிழமை பிற்பகல் பேச்சுக்கள் இடம்பெற்றன.

போரில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில். முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைக்க நிர்வாகம் தடையில்லை எனவும் அதனை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாவீரர் நினைவிடத்துக்கு அருகாமையில் அமைக்குமாறும் உயர்மட்டத்தினரால் மாணவர் ஒன்றியத்திடம் கோரப்பட்டது.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் கோரிக்கையை பரிசீலனை செய்த மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் அதற்கு இணக்கம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவாலயம் பல்கலைக்கழக வளாகத்தில் நிர்வாகத்தால் அடையாளம் காட்டப்பட்ட இடத்தில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

யாழ்.பல்கலைக்கழக பொங்குதமிழ் எழுச்சி நினைவகம் அமைக்கும் பணிகள் நிறைவடையும் நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகிறது.

வரும் மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் முள்ளிவாய்க்கால் நினைவாலயத்தில் மாணவர்களால் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### புதிய... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து அரசாங்கம் அடுத்த தேர்தலை இலக்கு வைத்து புதிய நிகழ்ச்சித்திட்டத்துடன் பயணிக்கவுள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத்தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து போட்டியிட வேண்டுமென்று நான் வலியுறுத்தியிருந்தேன்.இதனை பிரதமரும் ஏற்றுக்கொண்டிருந்தார். ஆனால் அரசியல் கற்ற பல பண்டிதர்கள் இருந்தனர் .ஜனாதிபதியுடன் இருந்த சட்டத்தரணிகள் வேறுபட்ட கருத்தை கொண்டிருந்தனர். இதனாலேயே நாம் சர்ச்சசைக்குரிய முடிவைப் பெற்றோம்.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சி வெற்றிபெறமாட்டாது.தமிழ், மற்றும் முஸ்லிம் வாக்குகளை பெறாமல் அவர்கள் 50 வீதத்தை பெறமுடியாது. எனவே அரசாங்கம் ஒற்றுமையாக எதிர்வரும் அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெறும்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலுடன் நாம் பல படிப்பினைகளை பெற்றுள்ளோம்.மக்களுக்கான திட்டங்களை நாம் தயாரித்து வருகிறோம்.நாம் பிரிந்து நின்றால் தோற்பது உறுதி. ஒற்றுமையாக நின்றால் வெல்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### இலங்கைப்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆய்வுகள் முடிய முன்னரே, இலங்கை இராணுவத்தை சேர்ந்த 49 பேர் கொண்ட அணியொன்று கடந்த பெப்ரவரி மாதம் லெபனானுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதையடுத்து, ஏனைய அணிகள் லெபனானுக்கு அனுப்பப்படுவதை ஐ.நா. அமைதிப்படைச் செயலகம் தடுத்திருந்தது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட ஐ.நா அமைதிகாப்பு நடவடிக்கை பணியக பேச்சாளர் நிக் பேர்ன்பக் ,

"மனித உரிமைகள் ஆய்வுக்குட்படுத்தப்படாமல், லெபனானுக்கு அனுப்பப்பட்ட 49 படையினர் குறித்து உடனடியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏற்கனவே லெபனானுக்கு அனுப்பப்பட்ட 49 படையினர் தொடர்பாக இந்த ஆய்வுகளில் மனித உரிமை கரிசனைகள் எழுப்பப்பட்டால், அவர்களைத் திருப்பி அழைக்குமாறு இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொள்ளப்படக் கூடும். அத்துடன், அரசாங்கத்தின் செலவிலேயே வேறு நபர்களை அனுப்பும் நிலையும் ஏற்படும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### வீரதுங்கவை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தோல்வியில் முடிந்திருக்கின்றன.

ஐக்கிய அரபு எமிரேட்சுக்கும் இலங்கைக்கும் இடையில் நாடு கடத்துதல் தொடர்பான உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ள போதிலும், அது இலங்கை நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறவில்லை.

இந்த நிலையில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அவரை நாடு கடத்துவதற்கான உத்தரவைப் பெற்றுக் கொள்ளுமாறு அந்த நாட்டின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் இலங்கை அதிகாரிகள் குழப்பமடைந்துள்ளதாக ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### இரணைதீவை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரணைமாதா கடற்கரையில், கண்டன உரைகளையும் நிகழ்த்தவுள்ளனர்.

பொதுஅமைப்புகள், பல்கலைக்கழக அமைப்புகள் உட்பட சகல தரப்பினருக்கும் இதில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக, இரணைதீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

1992ஆம் ஆண்டு பூர்வீக நிலமான இரணைதீவில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள், பூநகரி, முழங்காவில் இரணைமாதா நகரில் குடியேறினர். போர் நிறைவுக்கு வந்து இரணைமாதா நகரில், இரணைதீவு மக்கள் தற்போது வசித்து வந்தாலும், தமது பூர்வீக நிலமான இரணைதீவில் குடியேறவும் கடற்றொழில் புரியவும் அனுமதிக்க வேண்டும் என, கடந்த 358 நாட்களாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

### தாமரை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டவுடன் தற்போதைய அரசாங்கம் கலைக்கப்படுமாயின் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதாக மஹிந்த தலைமையிலான கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.

எனினும்,. கூட்டு எதிர்க் கட்சியில் உள்ள விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பில தலைமையிலான தூய ஹெல உறுமய போன்ற கட்சிகளும் பௌத்த கடும்போக்கு சிந்தனையுள்ள கட்சிகளும் இதனை எதிர்த்து வருகின்றன.

### இரண்டாம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அரச முஸ்லிம் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமாகியது.

### பௌத்தத்துக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதஸ்தலங்களைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டங்களை கொண்டுவருவதற்கு அரசாங்கம் தயாராகிவருகின்றது. இந்த சட்ட மூலம் நடைமுறைக்கு வந்தால், ஒரு விகாரையை நிர்மாணிக்க முடியாத நிலைமை உருவாகும்.

இந்தச் சட்ட மூலத்தில் உள்ள பிரகாரம், ஒரு பிரதேசத்தில் விகாரையொன்றை அமைப்பதாயின், சகல சமயத் தலைவர்களினதும் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதேபோன்று,தான் ஏனைய சமயத்தவர்களுக்கும் எனவும் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக் காட்டினார்.


பௌத்த விகாரைகளை கட்டுப்படுத்துவது தவறு எனவும், இது தொடர்பில் பொது மக்களும், மதத் தலைவர்களும் அறிவுறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### பால் மா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிவாயு விலை அதிகரிப்பு தொடர்பாக இறுதி முடிவெடுக்கப்படுமெனவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உலக சந்தையில் பால்மா மற்றும் சமையல் எரிவாயு விலைகள் அதிகரித்துள்ள காரணத்தால், இந்நாட்டு பால்மா மற்றும் எரிவாயு நிறுவனங்கள் விலையை அதிகரிக்கும்படி வாழ்க்கைச் செலவு தொடர்பான குழுவிடமும் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையிடமும் அனுமதி கோரியிருந்தன. ஒரு கிலோ பால்மாவின் விலை 100 ரூபாவாலும் எரிவாயு விலை சிலிண்டரொன்றுக்கு 275 ரூபாவாலும் அதிகரிக்கும்படி இந்நிறுவனங்கள் பாவனையாளர் அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

தற்போது 12.5 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரொன்றின் விலை கொழும்பில் 1431 ரூபாவாகவும் பால்மா கிலோவொன்று 810 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஜூன் 7இல் 'காலா'

சென்னை, ஏப்.23

ரஜினிகாந்த், பா.இரஞ்சித் கூட்டணியில் உருவாகியுள்ள 'காலா' திரைப்படம் ஜூன் 7 ஆம் திகதி வெளியாகும் என்று படத்தின் தயாரிப்பாளர் தனுஷ் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஷங்கர், ரஜினிகாந்த் கூட்டணியில் எடுக்கப்பட்ட '2.0' படத்தின் இறுதிக் கட்டப் பணிகளும் ஓரளவுக்கு முடியும் நிலையில் உள்ளன. 'எந்திரன்' படத்தின் 'சிட்டி' கதாபாத்திரத்தை மையமாக வைத்து இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் இடம்பெற்றுள்ள சண்டைக் காட்சிகள், உலக அளவில் கவனத்தை ஈர்க்கும் விதமாக எடுக்கப்பட்டுள்ளன. அதிலும், ரஜினியின் எந்திரன் கதாபாத்திரத்துக்காக பயன்படுத்தப்பட்ட 40 கிலோ எடையுள்ள ஆடை வெகுவாக ஈர்க்கும் என்கிறார்கள் படக்குழுவினர். அந்த ஆடையை அணிந்து பங்கேற்ற சண்டைக் காட்சிகளை ரஜினியே வெகுவாக வியந்து ரசித்ததாகக் கூறுகிறது பட்க்குழு. (அ)

# விஜய் படம் தீபாவளிக்கு நிச்சயம்




சென்னை, ஏப்.23

விஜய்-முருகதாஸ் கூட்டணியில் படம் என்றாலே ரசிகர்களுக்கு கொண்டாட்டம். அவர்களது இதுவரை ஒன்றாக வேலை செய்த படங்கள் அனைத்தும் மாபெரும் வெற்றிதான். இந்தப்படமும் அதுபோல வரவேற்பைக் கண்டிப்பாக பெறும் என்பது ரசிகர்களின் நம்பிக்கை.

இந்த நேரத்தில் 'விஜய் 62' படப்பிடிப்பு ஆரம்பிக்கும் போதே தீபாவளி வெளியீடு என்றனர். ஆனால் நடுவில் திடீர் பணிப்புறக்கணிப்பால் படத்தின் படப்பிடிப்புகள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டன. இதனால் பட வெளியீடு தள்ளிப்போகுமோ என்ற வருத்தம் ரசிகர்களிடம் இருந்தது.

தற்போது என்னவென்றால் படக்குழுவினர் இன்னும் நேரம் இருப்பதால் முதலில் திட்டமிட்டது போல் கண்டிப்பாக இவ்வருடத் தீபாவளிக்கு படம் வெளியாகும் என்று கூறப்படுகிறது. (அ)

# ஓய்வூதியப் போராட்டம் நிகரகுவாவில் 10 பேர் பலி

நிகரகுவா, ஏப்.23

முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்துக்கு 5 சதவீதம் வரி விதித்தும், ஓய்வூதியத்துக்கு முதலாளி மற்றும் தொழிலாளிகளின் பங்களிப்புத் தொகையை உயர்த்தியும் நிகரகுவா அரசு உத்தரவிட்டது. இதை எதிர்த்து தலைநகர் மனகுவாவில் கடந்த புதன் கிழமை ஓய்வூதியதாரர்கள் நடத்திய போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டது.

மறுநாள் ஓய்வூதியதார்களுக்கு ஆதரவாக மாணவர்களும், தொழிலாளர்களும் போராட்டத்தில் குதித்தனர். மனகுவாவில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற போராட்டம் வன்முறையாக மாறியது. நாடு முழுவதிலும் 3 நாள் வன்முறையில் 10 பேர் உயிரிழந்தனர். 100 பேர் பேர் காயம் அடைந்தனர். (அ)

# ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல் 31 பேர் உடல் சிதறி உயிரிழப்பு


காபூல்,ஏப்.23

ஆப்கானில் நேற்று நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலில் 31 பேர் உடல் சிதறிப் பலியாகினர்.

பல்வேறு காரணங்களுக்காக நீண்ட காலமாக தேர்தல் நடத்தப்படாமல் இருந்த ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்திற்கு தேர்தல் நடத்துவதற்கான பணிகளில் அந்நாட்டு தேர்தல் ஆணையம் ஈடுபட்டு வருகிறது. பல்வேறு இடங்களில் வாக்காளர் பதிவு மையங்கள் புதிதாக திறக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், காபுல் நகரின் தாஷ்-இ பார்சி என்ற பகுதியில் செயற்பட்டு வந்த வாக்காளர் பதிவு மையத்தில் நேற்று நுழைந்த தற்கொலைப்படை தீவிரவாதி, தான் கொண்டு வந்திருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டை வெடிக்க வைத்ததில் சுமார் 31 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 50 பேர் காயமடைந்துள்ளதாகவும் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலுக்கு எந்த தீவிரவாத இயக்கமும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.



# இளவரசரை வேவு பார்த்த விமானம் வானில் தகர்ப்பு

ரியாத், ஏப்.23

சவுதி அரேபியாவில் இளவரசர் முகம்மத் பின் சல்மான் தங்கியிருந்த அரண்மனை அருகே நேற்று முன் தினம் பறந்த ஆளில்லா விமானம் ஒன்றைப் பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டு வீழ்த்தியதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இளவரசர் முகம்மத் பின் சல்மான் சவுதியில் பல்வேறு சமூகச்சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருவதால் மத அடிப்படைவாதிகளுக்கும் இவருக்கும் பலத்த கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது.

மேலும், சில மாதங்களுக்கு முன்னர் ஊழல் செய்ததாகக் கூறி தனது சகோதரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து அவர்களை வீட்டுக்காவலில் வைத்தார்.

இந்நிலையில் சவுதி தலைநகர் ரியாத்தில், இளவரசர் முகம்மத் பின் சல்மான் தங்கியிருந்த அரண்மனை அருகே துப்பாக்கி சத்தமும், அதையடுத்து சிறிய குண்டு வெடிக்கும் சத்தமும் கேட்டுள்ளது. இதைத்தொடர்ந்து அந்தப்பகுதி உடனடியாகப் பாதுகாப்பு படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது. பின்னர் அரண்மனையில் இருந்த இளவரசர் சல்மான், அருகில் உள்ள இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்த பதுங்கு குழியில் தங்கவைக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து செய்தி வெளியிட்டுள்ள சவுதி அரசு, அரண்மனை மேல் ஆளில்லா உளவு விமானம் பறந்தது உண்மை தான், அரண்மனை மீது பறந்த சில நிமிடங்களிலேயே அந்த விமானம் பாதுகாப்பு படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டது. ஆனால் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி எதுவும் நடைபெறவில்லை என அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. (அ)

# சிறுமிகளை வன்புணர்ந்தால் தூக்குத் தண்டனை

## இந்தியாவில் அவசரச் சட்டம் அமுல்


புதுடெல்லி, ஏப்.23

12வயதுக்குட்பட்ட சிறுமிகளை வன்புணர்வு செய்பவர்களுக்குத் தூக்குத் தண்டனை அளிக்கும் அவசரச் சட்டம் இந்தியாவில் நேற்றுமுதல் நடைமுறைக்கு வந்தது.

காஷ்மீர் மாநிலம், கதுவா மாவட்டத்தில் 8 வயதுச்சிறுமி கூட்டுப்பலாத்காரம் செய்து கொல்லப்பட்டார். மேலும், உத்தரப்பிரதேச மாநிலம், உன்னாவ் மாவட்டத்தில் பாஜக எம்.எல்.ஏ உள்ளிட்ட 5 பேரால் சிறுமி ஒருவர் பலாத்காரம் செய்யப்பட்டார்.

சூரத் நகரில் 11-வயது சிறுமி 8நாட்கள் வைத்து பலாத்காரம் செய்யப்பட்டு, உடலில் 87 இடங்களில் காயங்களுடன் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார். இதே போன்று நாட்டின் பல நகரங்களில் சிறுமிகள் பலாத்காரத்தால் பாதிக்கப்படும் நிகழ்வுகள் தொடர்ந்து கவலையையும், பாதுகாப்பு அச்சுறுத்தலையும் ஏற்படுத்தி வந்தது.

இந்த நிலையில், ஐரோப்பியப் பயணத்தைக் முடித்துக்கொண்டு இந்தியப் பிரதமர் மோடி நேற்றுமுன் தினம் டெல்லி வந்தபின் மத்திய அமைச்சரவைக் கூட்டம் அவசரமாகக் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில், 12வயதுக்குட்பட்ட சிறுமிகளைப் பலாத்காரம் செய்தால் மரண தண்டனை விதிக்கும் அவசரச் சட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு சில திருத்தங்களும் செய்யப்பட்டன.இதற்கு இந்திய ஜனாதிபதியும் ஒப்புதல் அளித்துள்ளார். இதன்படி 12 வயத்துக்குக்கீழ்ப்பட்ட குழந்தைகளை பாலியல் பலாத்காரம் செய்பவர்களுக்குக் குறைந்தபட்ச சிறைத் தண்டனை 20 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. இதைக் குற்றத்தின் தீவிரத்துக்கு ஏற்ப வாழ்நாள் சிறை, அல்லது மரண தண்டனையும் அளிக்க முடியும். (அ)



# கழிவுக்குத் தடை

பீஜிங், ஏப்.23

உலகில் மிக அதிக அளவு கழிவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடான சீனா இனி அதற்கு தடை போட உள்ளதாக அறிவித்துள்ளது.

சீனா உலக நாடுகளில் இருந்து மறுசுழற்சி பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க பொருட்களை நீண்ட காலமாக இறக்குமதி செய்து வந்துள்ளது.

கடந்த ஆண்டு குறித்த கழிவுப் பொருட்கள் இறக்குமதிக்கு சீனா அரசு தடை விதித்தது. அந்த தடை உத்தரவை மீண்டும் நீட்டித்து மறு உத்தரவு பிறப்பித்துள்ளது சீனா.

2017 ஆம் ஆண்டு உலக நாடுகளிடம் இருந்து 24 வகையிலான கழிவுப் பொருட்களை சீனா தொடர்ந்து இறக்குமதி செய்து வந்துள்ளது. தற்போது சொந்த நாட்டில் உள்ள சுற்றுச்சூழல் பாதிப்புகளை எதிர்கொள்ள இருப்பதால், உலக நாடுகளின் கழிவுப்பொருட்களை இறக்குமதி செய்வதில் சிக்கல் இருப்பதாக அறிவித்துள்ளது.

மட்டுமின்றி ஏற்கனவே அமுலில் இருந்த 24 பொருட்களின் பட்டியலுடன் மேலும் 32 பொருட்களையும் அது சேர்த்துள்ளது.கடந்த ஆண்டு சீனா மேற்கொண்ட குறித்த அதிரடி முடிவால் பல நாடுகள் கடும் சிக்கலுக்கு உள்ளாகின.

கழிவுப்பொருட்களின் மறுசுழற்சிக்கு சீனாவையே நம்பியிருந்த பல நாடுகள் இதனால் பாதிக்கப்பட்டதாகக் கூறும் அதிகாரிகள், தற்போது வரை குறிப்பிட்ட சில நாடுகள் தங்கள் நாட்டு கழிவுப்பொருட்களால் தத்தளித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே சீனாவின் இந்த அதிரடி முடிவால் அவுஸ்ரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாணம், மலைபோல் குவியும் கழிவுகளை குழிதோண்டிப் புதைக்கும் பணியில் இறங்கியுள்ளது.மேலும் அமெரிக்காவில் இருந்து சீனாவுக்கு கழிவுப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கு கடந்த ஒரு வார காலத்தில் மட்டும் 400 மில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# சென்னைக்கு த்ரில் வெற்றி

ஹைதரபாத்,ஏப்.23

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கெதிரான பரபரப்பான ஆட்டத்தில் அம்பதிராயுடுவின் அதிரடியும் சாஹரின் விக்கெட் வேட்டையும் கைகொடுக்க சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

ஹைதரபாத்தில் நேற்று நடைபெற்ற ஐபிஎல் 20-வது ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணி களத் தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய சென்னை சூப்பர் கிங்ஸ் அம்பதி ராயுடு (79), சுரேஷ் ரெய்னா (54) ஆகியோரின் ஆட்டத்தால் 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 182 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 183 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சன்ரைசர்ஸ் ஹைதரபாத் அணி களம் இறங்கியது. சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தொடக்க பந்து வீச்சாளர் தீபக் சாஹர் அபாரமான பந்து வீச்சை வெளிப்படுத்தி ரிக்கி புய் (0), மனிஷ் பாண்டே (0), தீப் ஹூடா (1) ஆகியோரை அடுத்தடுத்து வெளியேற்றி அதிர்ச்சி அளித்தார். இதனால் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 22 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டை இழந்தது.



4ஆவது விக்கெட்டுக்கு கேன் வில்லியம்சன் உடன் ஷாகிப் அல் ஹசன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஓரளவிற்கு தாக்குப்பிடித்து விளையாடியது. சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் ஸ்கோர் 71 ஓட்டங்களாக இருக்கும்போது இந்த ஜோடி பிரிந்தது. ஷாகிப் அல் ஹசன் 24 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து கேன் வில்லியம்சன் உடன் யூசுப் பதான் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஆட்டத்தின் போக்கை மாற்றியது. நேரம் ஆகஆக கேன் வில்லியம்சன் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தார். இதனால் ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

35 பந்தில் அரைச்சதம் அடித்த கேன் வில்லியம்சன் அதன்பின் வானவேடிக்கை நிகழ்த்தினார். கடைசி 18 பந்தில் (3 ஓவர்) சன்ரைசர்ஸ் ஹைதரபாத் அணிக்கு 42 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 18-வது ஓவரை வெயின் பிராவோ வீசினார். இந்த ஓவரில் கேன் வில்லியம்சன் விக்கெட்டை வீழ்த்தினார். வில்லியம்சன் 51 பந்தில் 5 பவுண்டரி, 5 சிக்சருடன் 84 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். வில்லியம்சன் ஆட்டமிழப்பால் ஆட்டம் சென்னை சூப்பர் கிங்ஸ் பக்கம் திரும்பியது. யூசுப்பதான் 27 பந்துகளில் 45 ஓட்டங்களை பெற்றபோதிலும் இறுதி நேர ஆட்டமிழப்பால் ஹைதராபாத் அணியின் வெற்றி கைநழுவிப்போனது. இறுதியில் சென்னை சூப்பர் கிங்ஸ் 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக அம்பதி ராயுடு தெரிவானார்.

# 11 ஆவது முறையாகவும் சம்பியனானார் நடால்

மொனாகோ,ஏப்.23

மான்டே கார்லோ மாஸ்டர் டென்னிஸில் ரபெல் நடால் 11-வது முறையாக சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார்.

மான்டே கார்லோ மாஸ்டர் டென்னிஸ் மொனாகோவில் நடைபெற்றது. களிமண் தரையில் (Clay) நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ரபெல் நடால் உட்பட பல முன்னணி வீரர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஸ்பெயின் நாட்டின் முன்னணி வீரரும், களிமண் தரையில் ஜாம்பவானும் ஆன நடால், ஜப்பானைச் சேர்ந்த கெய் நிஷிகோரியை எதிர்கொண்டார்.

இதில் நடால் 6-3, 6-2 என நேர்செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றார். மாண்டே கார்லோ மாஸ்டர் பட்டத்தை 11ஆவது முறையாக நடால் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார். ஒட்டுமொத்தமாக நடால் இத்துடன் 31 மாஸ்டர் பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.

நடால் இதுவரை மொனாகோவில் 72 ஆட்டங்களில் விளையாடி உள்ளார். இதில் நான்கு முறை மட்டுமே தோல்வியைத் தழுவியுள்ளார்.




# சம்பியனானது பார்சிலோனா

கோபா,ஏப்.23

கோபா டெல் ரே இறுதிப் போட்டியில் செவியாவை 5-0 என வீழ்த்தி பார்சிலோனா சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது. கோபா டெல் ரே கால் பந்து தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்றது. இதில் பார்சிலோனா - செவியா அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

பார்சிலோனா அணி தொடக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஆட்டத்தின் 14-வது நிமிடத்தில் லூயிஸ் சுவாரஸ் முதல் கோலை பதிவு செய்தார். 31-வது நிமிடத்தில் மெஸ்சி ஒரு கோல் அடித்தார். 40-வது நிமிடத்தில் சுவாரஸ் மேலும் ஒரு கோல் அடிக்க பார்சிலோனா முதல் பாதி நேரத்தில் 3-0 என முன்னிலைப் பெற்றிருந்தது.

2ஆவது பாதி நேரத்திலும் பார்சிலோனா கையே ஓங்கியது. 52-வது நிமிடத்தில் அன்ட்ரேஸ் இனியெஸ்டா ஒரு கோலும், 69-வது நிமிடத்தில் கவுட்டினோ பெனால்டி மூலம் ஒரு கோலும் அடிக்க 5-0 என பார்சிலோனா செவியாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

# புதிய போட்டி


டெல்லி,ஏப்.23

ஐ.பி.எல். ரி-20 கிரிக்கெட் போட்டித் தொடரில், ஒவ்வொரு நாளும் புதிய சாதனைகள், அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்து வரும் நிலையில், வீரர்கள் இடையே புதிய போட்டி பிரபலமாகி உள்ளது.

பிரேக் த பியர்ட் என்ற அந்த போட்டியில், தங்களுடைய தாடியை வித்தியாசமான முறையில் மாற்றிக் கொள்ள வேண்டும்.

சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் ஷிகர் தவான் இந்த சவாலை தொடக்கி வைத்தார். அந்த சவாலில் கேன் வில்லியம்சன், ரவீந்திர ஜடேஜா, மனிஷ் பாண்டே, ஹர்திக் பாண்டியா, குருணால் பாண்டியா என பல்வேறு வீரர்கள் கலந்து கொண்டுள்ளனர். அவர்கள் தங்களுடைய தாடியை மாற்றி அமைத்து, அதற்கான வீடியோவை வெளியிட்டு வருகின்றனர்.

ஏற்கனவே ஐ.பி.எல். இல் இந்த சவால் பிரபலம். தற்போது மீண்டும் தொடங்கியுள்ளது. இந்த சீசன் முடிவதற்குள் இன்னும் எத்தனை வீரர்கள், தங்களுடைய தாடியை இழக்க உள்ளனரோ?



# உலகக் கிண்ணம் இந்தியாவுக்குத்தான்



கொல்கத்தா,ஏப்.23

2019-ம் ஆண்டு உலக கோப்பையை இந்தியா தான் வெல்லும் என அந்த அணியின் முன்னாள் அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக் கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் விளம்பர நிகழ்வில் கலந்து கொண்ட ஷேவாக், அளித்த பேட்டியில்,

'எம்மிடம் உள்ள ஒருநாள் கிரிக்கெட் அணியை பார்க்கையில் 2019-ம் ஆண்டு உலக கோப்பையை நாம் தான் வெல்வோம். அதனை நம்பமாட்டீர்களா? நிச்சயம் நமக்கு தான் கோப்பையை வெல்ல அதிக வாய்ப்பு உள்ளது. அதேபோல் தற்போதைய இந்திய அணி, வெளிநாட்டில் டெஸ்ட் போட்டி தொடரை வெல்லும் திறன் கொண்டுள்ளது. அதற்குரிய பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்டம் எம்மிடம் இருக்கிறது.

தென்னாபிரிக்காவில் டெஸ்ட் தொடரை வெல்வதை மயிரிழையில் தவறவிட்டோம். இல்லையெனில் வரலாறு படைத்திருப்போம்.

நாங்கள் விளையாடிய நாட்களில் ஸ்ரீநாத், சகீர்கான், அகர்கர், நெஹ்ரா ஆகிய 4 வேகப்பந்து வீச்சாளர்கள் இருந்தனர். ஆனால் 2003 ஆம் ஆண்டு உலக கோப்பை தவிர 4 பேரும் ஒரே நேரத்தில் சேர்ந்து விளையாட முடிந்ததில்லை. தற்போதைய அணி எந்த சூழலிலும் சிறப்பாக செயல்படும் திறமை படைத்ததாகும். அவுஸ்ரேலிய அணியில் ஸ்டீவன் சிமித், டேவிட் வோர்னர் இருவரும் இருக்கிறார்களா? இல்லையா? என்பது பிரச்சினை இல்லை. இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும் அவுஸ்ரேலிய தொடரை இந்திய அணி வெல்லும். தொடக்க ஆட்டக்காரராக விளையாட எனக்கு வாய்ப்பு அளித்தவர் கங்குலி தான். எனக்காக அவர் தனது இடத்தை விட்டுக்கொடுத்தார். அவருக்கு நன்றிக் கடன்பட்டுள்ளேன்' என்றார். (த)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 23.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.